**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.421 நாள்: 27.08.2026

**பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (27.08.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இராயபுரம் மண்டலம், வார்டு-61க்குட்பட்ட எழும்பூர், காந்தி எர்வின் சாலையில் தூய்மைப் பணி மற்றும் குப்பைத் தொட்டி வைக்கும் இடம், இலவச ஒப்பனை அறை மற்றும் அப்பகுதியில் சாலையின் மையத்தடுப்புகளில் பசுமைப் பரப்பினை அதிகரிக்கும் வகையில் நடப்பட்டுள்ள செடிகள், பாந்தியன் சாலையில் பள்ளி மாணவர்களின் காலை உணவுத் திட்டத்திற்கான மைய சமையல் கூடம் அமைப்பது குறித்தும், புதுப்பேட்டையில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், தெருவிளக்குப் பிரிவு அலுவலகம் உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, வடக்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள், தூய்மைப் பணிகளை தினசரி மேற்கொள்ளவும், குப்பைத் தொட்டிகளை அந்தந்த தெருக்கள் மற்றும் சாலைகளின் குப்பைத் தொட்டி மையத்திற்குள் வைத்திருக்கவும், ஒப்பனை அறைகளை தூய்மையாகப் பராமரிக்கவும், சாலைகளின் மையத்தடுப்புகளில் நடப்பட்டுள்ள செடிகளுக்கு அன்றாட தண்ணீர் ஊற்றுவது, கத்திரிப்புப் பணிகள் மேற்கொள்வது மற்றும் பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**